EMPLOYEES' TRUST FUND BOARD
සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# *தரம் 05 புலமைப்பரிசில் நன்மை திட்டம்*

***விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்த முன்னர் அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.***

1. விண்ணப்பத்தின் பகுதி **I** இனை இணைய வழியில் (Online) சமர்ப்பித்தல் வேண்டும். அத்தோடு பின்வரும் ஆவணங்களை தரவேற்றம் (Upload) செய்தல் வேண்டும்.

2. விண்ணப்பத்தின் **II** ஆவது பகுதியை தரவிறக்கம் செய்து (Download) தொழில் தருனரால் அங்கத்தவரின் பங்களிப்புத் தொகை செலுத்தல் பற்றிய விபரங்களை பூரணப்படுத்தி தரவேற்றம் (Upload) செய்தல் வேண்டும். அறிவுறுத்தல் பத்திரத்தை நன்கு வாசித்து எங்களால் கோரப்பட்டுள்ள ஆவணங்களோடு தொழில் தருனரினால் பூரணப்படுத்தபட்ட விண்ணப்பத்தோடு ஊடுகதிர் (Scan) செய்து அதனை PDF கோவையாக மாற்றவும். பின்பு அந்த PDF கோவையை ETF அங்கத்தவரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்கு பெயர் மாற்றம் (Rename) செய்து தரவேற்றம் (Upload) செய்யவும்.

**<u>தேவையான ஆவணங்கள்</u>**

3. மாணவன்/மாணவியினுடைய பிறப்புச்சான்றிதழின் நிழற்படப் பிரதியொன்றை அத்தாட்சிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும். (பாடசாலை அதிபரினாலேயே அத்தாட்சிப்படுத்தி அனுப்ப வேண்டுமென்ற அவசியம் இல்லை சமாதான நீதவான், கிராமசேவகர் அல்லது சட்டத்தரணி ஒருவராலும் அத்தாட்சிப்படுத்த முடியும்)
4. பிள்ளையின் பெறுபேற்று அட்டவணையின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் (உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இணையத்தளத்தின் மூலம் பெற்றுக் கொண்ட பிரதியொன்றை சமர்ப்பிக்கவும்)
5. அங்கத்தவரின் தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதியொன்று தொழில்தருநரினால் உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.

- பின்வரும் குறைபாடுகள் காணப்படுமாயின் அதற்காக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களை தரவேற்றம் (Upload) செய்தல் வேண்டும்.

- மாணவனின் /மாணவியின் பெறுபேற்று பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களுக்கிடையில் வேறுபாடிருப்பின் அந்த இரு பெயர்களினாலும் அழைக்கப்படும் மாணவன் /மாணவி ஒரே நபர் என பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- மாணவன் /மாணவியினுடைய பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள தந்தை அல்லது தாய் அல்லது பாதுகாவலரின் பெயர் மற்றும் அவர்களது தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் ஆகியவற்றுக்கிடையில் வேறுபாடுகள் இருக்குமாயின் அப்பெயர்களினால் அழைக்கப்படுபவர் ஒரே நபர் என கிராம அலுவலரால் உறுதிப்படுத்தி பிரதேச செயலாளர் மூலம் மேலொப்பம் இடப்பட்ட கடிதமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- தொழில்தருநரினால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவருடைய பெயர்,படிவம் II (Form II) இன் மூலம் அனுப்பப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டையிலுள்ள பெயர் ஆகியவற்றுக்கிடையில் வேறுபாடுகள் இருக்குமாயின் அப்பெயர்களினால் அழைக்கப்படுபவர் ஒரே நபர் என தொழில் தருநரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. விண்ணப்பம் (தாய் அல்லது தந்தை சமர்ப்பிக்காது) பாதுகாவலரினால் சமர்ப்பிக்கப்படுமாயின் அவர் சட்டரீதியான பாதுகாவலர் என்பதை உறுதி செய்வதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. பெற்றோர்களில் இருவரும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் அங்கத்தவராக இருப்பின் ஒருவர் மாத்திரமே விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பித்தல் முடியும்.
8. மாணவர்/மாணவி ஒருவர் சார்பில் ஒரேயொரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். எக்காரணம் கொண்டும் தயவு செய்து ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதனைத் தவிர்த்துக் கொள்ளவும்.

9. மாணவர் /மாணவி புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய போது (2025 செப்டெம்பர்) பரீட்சைக்குத் தோற்றிய மாதத்திற்கு முன்னரான 12 மாதங்களுக்குரிய உதவுதொகை பரீட்சைக்குத் தோற்றிய மாதம் முடிவடைவதற்கு முன்னர் தொழில்தருநரினால் செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தொழில்தருநரினால் வைப்புச் செய்யப்பட்ட உதவுதொகை தொடர்பான அரையாண்டு திரட்டுக்கள் (Half year returns) அல்லது இணையவழி (e-payment) பற்றிய அறிக்கைகளும் சபைக்கு அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும்.

10. சுயதொழில் அங்கத்தவர்கள் பரீட்சை நடைபெற்ற மாதத்திற்கு முன்னரான 36 மாதங்களுக்குரிய உதவுதொகைகள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தொடர்ச்சியாக செலுத்தியிருத்தல் வேண்டும்.

11. **2025 அக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர்** www.etfb.lk இணையத்தளத்திற்குப் பிரவேசித்து 05 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் திட்டத்தின் கீழான விண்ணப்பத்தைப் பூரணப்படுத்தி தரவேற்றம் (Upload) செய்யவும்.

12. மேற் கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத மற்றும் பூரணமற்ற, தெளிவற்ற, தவறான தகவல்களை உள்ளடக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் மற்றும் தாமதித்து கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

13. மாவட்ட மட்டத்தில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற 9,000 மாணவர்களுக்கு மாத்திரமே நிதி உதவி வழங்கப்படும். பயனாளிகளைத் தெரிவு செய்வது தொடர்பான இறுதி முடிவு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்படும்.

For more information


Tell - 011 -7747200, 011- 7747281, 011-7747282
Whatsapp - 071-6375045
Email - ofrschl@etfb.lk